**இ.ம.எண்.4/2023 இன்**

**இ.ம.எண்.02/2021**

**உள்**

**அ.வ.எண். 104/2020**

**தேதி – 18.08.2023**

இம்மனுவானது காலம் சென்ற 1ம் மனுதாரரின் வாரிசான 2 முதல் 6 மனுதாரர்களை வாதிகளாக சேர்ப்பதில் ஏற்பட்ட 52 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க உத்தரவிடக்கோரி தாக்கல்.

அசல் வழக்கானது இறந்துபோன 1ம் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்துவந்தபோது கடந்த 18.11.2021–ம் தேதி காலம் சென்றுவிட்டார். அவருக்கு 2 முதல் 6 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் ஆவர். மேற்படி நபர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக உரிய காலத்திற்குள் சேர்க்கவில்லை. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலவில்லை. எனவே, 52 நாட்கள் காலதாமதமாகிவிட்டது. அதனை மன்னித்து அசல் வழக்கில் 2 முதல் 6 மனுதார்களை வாதிகளாக சேர்க்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல்.



எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை பரிசீலிக்கும்போது, 1ம் மனுதாரர் எப்போது இறந்தார் என்பதை பற்றிய விபரம் எதுவும் சொல்லப்படவில்லை என்றும், 1ம் மனுதாரரின் வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், 1ம் மனுதாரரின் தாயார் தற்போது வரை உயிருடன் இருந்தவந்தபோதிலும் அவர் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்பதால், மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனு மற்றும் எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகளை பரிசீலித்து அசல் வழக்கினை பார்வையிடும்போது அசல் வழக்கானது கடந்த 04.09.2020 ம் தேதி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை தாக்கல் செய்த வாதி இறந்துவிட்டார். எனினும் வழக்கிற்கான வழக்குமூலம் தற்போது வரை உயிர்ப்புடன் இருந்து வருகிறது. எனவே இவ்வழக்கினை மேற்கொண்டு நடத்துவதற்கு வாதியின் சட்டப்படியான வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமானதாகும்.

எனினும் மேற்படி 1ம்வாதியின் வாரிசுகள் உரியகாலத்திற்குள் சேர்க்கப்படவில்லை. 1ம்வாதியின் வாரிசுகளை உரிய காலத்திற்குள் சேர்க்காததற்கு மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் போனதாக காரணமாக சொன்னாலும் அதற்கான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும் வழக்கினை மேற்கொண்டு நடத்த வேண்டியது அவசியம் என்பதால் மனுதாரர்கள் அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனினும் மேற்படி மனுதாரர்களை அசல் வழக்கில் வாதிகளாக சேர்ப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் அதற்கு செலவுத்தொகை விதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்து அந்த வகையில் மனுதாரர்கள் ரூ.500/- எதிர்மனுதார்களுக்கு செலவுத் தொகையாக வரும் 25.08.2023 தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறினால் மனுவானது தானகவே தள்ளுபடியாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது.



இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

அழைக்க - 25.08.2023

P KUMAR

Digitally signed by P KUMAR
Date: 2023.08.18 18:30:11 +0530

கூ.மா.உ.நீ

அம்பாசமுத்திரம்